தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 2 | பிப்ரவரி 1942 | இதழ் 2

திரு. ஸ்ரீநிவாசமூர்த்திக்கு வாழ்த்து

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சீராரும் நீதிக்கட்சித் திலகமெனத் திகழ்ந்த
சிறப்புடைய பனகல்மன்னர் பண்புடைநல் அமைச்சாய்
ஊராரும் உற்றவரும் உவப்புறவே இருந்த
உன்னதமாம் காலமதில் உவப்புடனே அமைத்த
பேராரும் இந்திய மருத்துவப் பள்ளிக்குப்
பெட்புடைய தலைவரெனப் பேருடனே இருந்து
காராரும் கடும்பிணிகள் கணக்கின்றிப் போக்கிக்
கண்ணியமாய்த் தானிருந்த கருணைநிறை வடிவே!

உத்தமரென் றுலகர்புகழ் சர்உஸ்மான் கமிட்டிக்
குயர்செய லாளரெனவேநீ ருற்றொளிரும் அமயம்
சித்தரது மருத்துவமே சீருடைய தென்று
சிறப்புடனே மற்றதற்கு வகுப்புவழி அமைத்து
நித்தமுமே பிறர்க்கெனவே வாழ்வதனை நடத்தும்
நின்மலனே! ஸ்ரீநிவாச மூர்த்தியெனும் பெயரோய்
பத்தியுடன் பரவிவரும் மாணவர்தம் குழூஉக்குப்
பாங்குடனே பயிற்றிவரும் பண்புடைய குணத்தோய்!

சாதிமத மொழிவேறு பாடுநோக் காதிருந்து
சாந்தமுறும் தாயினைப்போல் தண்ணளியும் காட்டி
நீதியுடன் எம்முடைய பிழைபலவும் பொறுத்து
நேர்மையுடன் காத்துவந்த நிறையறிவு வடிவே
மோதியலை வீசிவரும் மொய்ம்புடைய கடலின்
மொய்த்தமணல் போல்பெருக நின்வாழ்நாள் என்றே
எதிலர்க்கும் இன்துணையாய் இனிதருளி வருஉம்
எம்பெருமான் இணையடிகள் இறைஞ்சிவரு வோமே.

இந்திய மருத்துவ கலாசாலை தலைவருக்கு நடந்த பிரிவு உபசாரம்

நாளது பிப்ரவரி மாதம் முதல் தேதி தலைவர் ஸ்ரீநிவாசமூர்த்தியவர்கள் பதவியிலிருந்து நீங்கியதன் காரணமாக, இந்திய மருத்துவ கலாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் 8ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஹைட்பார்க் (Hyde park) கில் கூடிப் பிரிவு உபசாரம் நடத்தினார்கள். சில பழைய மாணவர்களும் கலந்துகொண்டார்கள். சங்கீதம் நடனம் நாடகம் முதலியவைகள் யாவரும் வியக்கும்படித் திறமையுடன் வெகு சிறப்பாக மாணவர்கள் நடத்தினார்கள். அச்சமயம் பலர் பல பிரிவு உபசாரப் பத்திரங்கள் வாசித்தார்கள். அப்போது சித்தமாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் சார்பாகவும் ஒன்று வாசித்தனர்.

உயர் திருவாளர் வைத்திய பேராசிரியர், வைத்திய ரத்தினம்,

கோ. ஸ்ரீநிவாச மூர்த்தி, பி.எ. பி. எல்.; எம். பி & சி. எம்;

இறையாட்சி இந்திய மருத்துவ பாடசாலைத் தலைவர் அவர்கட்கு வாசித்தளித்த பிரிவு உபசார வாழ்த்துப்பா.

நிலைமண்டில ஆசிரியப்பா.

நீதிக் கட்சியர் நேர்மை யுற்ற
அரசியற் சார்ந்த அமைச்சரா யிருந்த
பானகல் அரசர் பண்புடன் அமைத்த
இறைமாண் ஆட்சி இந்திய மருத்துவ
பாட சாலை தன்னிற் பாங்குடன்
தலைமை தாங்கித் தள்ளரும் பிணிகள்
யாவும் இந்திய மருத்து முறையால்
போக்கிப் பொலியும் புகழுடை யாள
உஸ்மான் கமிட்டியின் உயர்செய லாளராய்
இருந்து தானொரு தமிழன் என்ற
உணர்ச்சி யோடு தமிழ்மருத் துவமாம்
சித்த மருத்துவந் தனக்குச் சீரிய
பேரா தரவு பெற்றியின் காட்டி
அதற்கென வேறொரு வகுப்பினை அமைத்தும்
இன்றி யமையா வழிகள் பலவும்
அமைத்துத் தந்த அருங்குணத் தாள

இத்தகைச் சிறந்த இந்திய மருத்துவந்
தனக்குத் தற்போ துற்ற தளர்வினைத்
தள்ளி அறவே ஒழித்து நின்று
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராய்
இருக்கும் எங்கள் எழிலுடை யாள
தந்தை மகனுக் காற்றும் நன்றி
அவையகந் தன்னில் முந்தி யிருப்பச்
செயலே கடமை யென்று புலவோர்
மொழிந்த மூதுரைக் கொப்ப ஈங்குத்
தந்தை முறையில் சார்ந்தே உன்றன்
மாணவர் தங்களை மாண்புடன் போற்றி
நல்லொளி தந்த விண்ணொளிர் மணியே
தமிழன் தெலுங்கன் ஆரியன் துலுக்கன்
கவின்மலை யாளி கன்ன டத்தான்
என்ற பேதம் இன்றி ஒன்றும்
தாய்தன் மக்களை ஒப்ப நோக்கும்
இயல்பைப் போல யாவர் பாலும்
ஒப்ப நோக்கும் உயர்நோக் காள
ஈங்குற் றுளிரும் ஆசான் மார்கள்
மாணவர் யாவரும் அறித லின்றிச்
செய்த சிறுசிறு பிழைகள் உண்டெனின்
'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே'
என்ற மொழிபோல் பொறுத்தாள் பெரும
இன்று நீதான் எங்கள் பாட
சாலை விட்டுப் பிரிவை யெனினும்
எங்கள் நேயம் உன்றனை விட்டுப்
பிரியா தென்றும் பின்தொடர்ந் திடுமே
இத்தகை சிறந்த உன்றன் வாணாள்
சென்னைக் கடற்கரை மணலினும் பலவாய்ச்
சிறந்தொளிர்ந் தென்றும் செழிக்க எனவே
இறைவனை இனிதின் வழுத்திடு வோமே.

இங்ஙனம்,

சென்னை இறையாட்சி இந்திய மருத்துவ பாடசாலை
சித்த வகுப்பு ஆசிரியர்களும் மாணாக்கர்களும்

தலைவர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"..................The recent excavations in the North West India had shown that learning and culture had, in very ancient times, gone from South India to many parts of the world, and a day will soon come when through translations from the original difficult Tamil, people all over the world could understand the wonderful Sidha literature which is still mostly a sealed book. Then the value of the Baspams and Chendoorams and other preparations would come to be realised. In my vision of the future, I have the picture of students from all over the civilised world coming here, to South India, to learn what only this land could teach as they used to come when Taxilla was a big University. ... ... "

உயர்திருவாளர், மருத்துவ பேராசிரியர்,
வைத்தியரத்தினம் ஆய நமது குரு

கோ. ஸ்ரீநிவாசமூர்த்தி

C. B. H. Rau

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

எனக் குறளில் கண்டவாறு இந்திய மருத்துவம் அரசாங்க ஆதரவின்றி மடியுந்தருவாயில் அதற்குப் புத்துயிர்தந்து, அதற்காகத் தன் பதவி பெருமை எல்லாவற்றையும் புறக்கணித்து இந்திய மருத்துவத்திற்கே தன்மனப்பூர்வமாக உழைத்துவரும் நமது குரு ஸ்ரீநிவாசமூர்த்தியின் புகழ் இந்திய மருத்துவம் உள்ளமட்டும் விளங்கும் என்பதில் என்ன சந்தேகம்? நமது பாடசாலைக்குத் திலகமென விளங்கும் நமது குரு இந்திய மருத்துவத்திற்குக் காலத்திற்கேற்ப நூதனமான நோக்கத்தைப் புகட்டி யிருக்கிறார். இந்திய மருத்துவத்தின் தத்துவங்களை எவ்வாறு செவ்வனே அறிவது, அவைகள் தற்கால ஆராய்ச்சியில் கிடைத்த உண்மைகளுக்கு எவ்வாறு சாதகமா யிருக்கின்றன, இரண்டு மதக் கொள்கைகளைக் கற்றுக்கொள்வதால் ஒருவன்

அறிவு எவ்வாறு பதின்மடங்கு விருத்தியாகிறது என்றவைகளை ஐயந் திரிபற நமது குரு நமக்கு விளக்கிவைத்தார். மேலும்,

> " கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக "

என்பதைத் தன் நடத்தையால் எடுத்துக் காட்டினர். பரந்த நோக்கமும், மிக நுட்ப அறிவும், வியக்கத்தக்க சொல் வன்மையும், வாதத்தில் ஒப்பற்ற திறமையும், தளர்ச்சியில்லா ஊக்கமும், 'நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று சொல்லும் வீரத்தையும் ஒருங்கே பெற்றவர் நமது குரு. இன்னரைப் பெற்றெடுத்த இருமுதுகுரவரின் புண்ணியந்தான் என்னே?

ஒருபுறம் சுதேச வைத்தியர்களும், மற்ருெருபுறம் பரதேச வைத்தியர்களும் தத்தம் கொள்கைகளே சரியென்று ஓரே பிடிவாதமாக நிற்கையில் நமது குரு ஸ்ரீநிவாசமூர்த்தி இருதிறத்தாருக்கும் சமாதானமாகு முறையில் இந்திய மருத்துவத்தை விளக்கிவைத்து இந்திய மருத்துவம் தற்கால ஆங்கில வைத்திய முறைகளில் மிகவும் போற்றத்தக்க ஒரு சிலவற்றை ஏற்றுக்கொள்வதால் அதற்கு ஒரு விசேஷ மகிமையுண்டாகிறது என்பதைப் பிரத்தியக்ஷபூர்வமாகக் காட்டினர். அதனல் இந்திய மருத்துவம் மாறிவிடாமல் தன் முக்கியாம்சத்தில் குறையாமல் இருக்கும் என்பது நம் எல்லோருக்கும் 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' தெளிவுற்றிருக்கிறது.

> " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு "

நமது குரு நமக்குச் செய்த உபதேச மொழிகள் பலதிறப்படுவன. அவற்றில் ஒப்பற்றதும், மிகவும் போற்றத்தக்கதும், சகல தேச மருத்துவ மாணவர்களுக்குப் பொருந்துவதும் பின்வருமாறு:

> " First of all and most of all be a gentleman;
> then a scholar and then a doctor. "

இவ்வாறு உபதேசம்பெற்ற நாம் 1942-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் உத்தியோகத்திலிருந்து நீங்கின நமது குரு ஸ்ரீநிவாசமூர்த்திக்கு எவ்விதம் கைம்மாறு செய்யப்போகிறோம்! நம்மாலாகக்கூடியது ஒன்றுதான்; அஃதென்னவென்ருல்: நாமெல்லாரும் ஏகமனதுடன் இறைவனை விளித்து நமது குருவிற்குத் தீர்க்காயுளும், திடகாத்திரமும், ஆரோக்கியமும் அவர் கோரிக்கை வெற்றிகரமாகவே முடிய வேண்டுமென்று பிரார்த்திப்பதன்றி வேறில்லை.

இந்திய பிராசீன வைத்திய சமாஜம்

கும்பகோணம்

கும்பகோணம் இந்திய பிராசீன வைத்திய சமாஜத்தின் கூட்டம் சமாஜ தர்ம சித்தவைத்தியசாலைக் கட்டடத்தில் 3-2-42 மாலை 6 மணிக்குச் சீர்காழி வைத்தியபூபதி T. M. நாராயணசாமி அய்யர் தலைமையில் கூடியது. தலைவர் தமது முன்னுரையில் இச்சமாஜம் சென்ற 1913, பிப்ரவரி 13-ந் தேதி முதல் செய்த சேவையையும் இந்திய வைத்தியத்தின் எதிர்கால நிலைமையைப்பற்றியும் பேசினார்கள். பின் வைத்தியபூபதி G. கண்ணுசாமி பிள்ளை அவர்களும், கனம் P. கோவிந்த பிள்ளை அவர்களும் முறையே இந்திய வைத்திய அபிவிருத்தியும் பொதுஜன சேவையும்; இந்திய பிராசீன வைத்திய தத்துவம் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. சங்கச்சார்பில் 28 வது வருஷபூர்த்தி விழாவும், மகாநாடும், மருந்து கண்காட்சியும் நிகழும் மாசிமீ 3 வது வாரத்தில் நடத்தத் தீர்மானித்தது.

2. சென்னை இறையாட்சி இந்திய மருத்துவ பாடசாலைத் தலைமைப் பேராசிரியர் வைத்தியரத்தினம் காப்டன் G. ஸ்ரீநிவாசமூர்த்தி அவர்கள் நாளது பிப்ரவரிமீ முதல் தமது பதவியினின்று விலகி ஓய்வு கொள்வதால் அவருடைய அரும்பெரும் தேசியத் திருப்பணியைப் பாராட்டியும், அவர்களை நமது சமாஜ சார்பில் வரவேற்று ஒரு பிரிவு உபசாரம் நடத்தவும் அவர்கள் உருவப்படத் திறப்பு விழா ஆற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

3. சென்னை இறையாட்சி இந்திய மருத்துவ பாடசாலைக்கு உயர் திரு. P. V. கிருஷ்ணராவ், B. A., M. B. B. S.; F. I. M. அவர்களை பிரின்ஸிபாலாக நியமனம் செய்ததுபற்றி இச்சங்கம் தமது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

4. சென்ற 18 வருடகாலமாக ஜனோபகாரமாய் இவ்வைத்திய சமாஜத்தினுதரவில் தர்மவைத்தியசாலை நிறுவி நடத்திவரும் போஷகர் கனம் P. கோவிந்த பிள்ளை அவர்கள் உருவப்படத்தை இந்தச் சமாஜக் கட்டடத்தில் திறந்துவைக்கத் தீர்மானிக்கப் பெற்றது.

5. இந்திய வைத்திய அபிவிர்த்தியை முன்னிட்டு ஓர் வைத்திய மாதாந்தரம் நடத்துவதென்றும், கூட்டுறவு மானேஜிங் முறையில்

ஒரு இந்திய வைத்திய பாடசாலை நிறுவி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

பின் புதுவருடத் தலைவர் அங்கத்தினர்கள் தேர்தல் நடைபெற்றுத் தலைவர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

P. கோவிந்த பிள்ளை.
காரியதரிசி.

வைத்திய சதகநாடி

(மலர் 1 இதழ் 11: 103-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசமுள்ள ரூபமெல்லாம் விழியிற் காட்டும்
பண்பான ரசமதுவே நாவிற் காட்டும்
பிரிசமுள்ள கந்தநா சியினிற் காட்டும்
பேசினுயிர்க் கூறுகன்ம விந்திரியந்தான்
வரிசையுட னைந்தாகும் வாக்கு பாதம்
வளர்பாணி பாயுருவோ டுபஸ்த மைந்தாம்
விரிவதற்கு வாக்குவாய் பாதங் காலாம்
வியன்பாணி கையாம்பா யுருகுதக்க ணுமே. (7)

கண்ணான வுபஸ்தமென் பதுவே லிங்கம்
கருதுமிவை யஞ்சாகும் ஞானேந்திரியம்
தண்ணான வைந்தாகும் வசனமுடன் கமனம்
தானமொடு விசர்க்கமா னந்த மைந்தாம்
ஒண்ணான வசனமது வார்த்தை வாய்க்கூ
றுறுகமனம் நடைகாலின் கூறதாகும்
திண்ணான தானமென்றால் கொடுக்கல் வாங்கல்
செய்யுமிரு கைக்குமுறு கூறதாமே. (8)

கூறான விசர்க்கமஃ தபான வாயில்
கொழுகிமலம் விடுத்தலுயிர்க் கூறுமென்று
வீறான ஆனந்தம் லிங்கந் தன்னில்
மேவுநீர் விந்துவிடுங் கூறு மென்றும்
பேறான காணமினி நான்கு கேளீர்
பெரியமனம் புத்தியாங் காரஞ் சித்தம்
வாறான மனநினைக்கும் புத்தி விசாரிக்கும்
ஆங்காரங் கொண்டெழும்பும் சித்தமொன்று விக்கும். (9)

ஒன்றான அறிவொன்று மதனிற் கூடி
யுள்ளமதைக் கண்டுமகிழ்ந் திருக்கு மென்று
நன்றான தத்துவத்திற் பூத மைந்து
நல்லபொறி யைந்துபுல னைந்தினோடு

கண்டாயோ ஞானவிந் திரியமைந்து
கன்மவிந் திரியமைந்து கரண நான்கும்
ஒன்றான வறிவினுடன் முப்பதாயிற்
றுத்தமனே தசவாயு பத்துங் கேளே. (10)

பத்துக்கால்

பத்தான வாயுத்தான் பிராணனொ டபானன்
பதிவான வியானனுதா னன்சமானன்
சித்தான கூர்மனுட னுகன்கிரி கரனும்
தேவதத்த னுடன்தனஞ் சயன்பத் தாகும்
வித்தான பிராணன்மூ லத்தைச் சேர்ந்து
மேனோக்கிச் சிரசில்முட்டி விழியின் கீழாய்ச்
செத்தாக நாசிவழி யோடுமீ ராறில்
திரும்பியெட் டுள்புகுந்து நால்வீண் போமே. (11)

போச்சுதே கடிகையொன் றிற் சுவாசந் தானும்
புகல்வார்கள் முந்நூற் றறுபதாக
எச்சதே நாளொன் றி லிருபத் தோரா
யிரத்தறுநூ றுமூன் றி லொன்று வீணாய்
ஆச்சுதே சமானமதி லீரா றுகும்
அம்புவியில் நடைகொண்டால் பதினா றுகும்
வாய்ச்சுதே யோட்டமதி லாறஞ்சாகும்
வரிவிழிக டுஞ்சமுப்பத் தாறு வீணே. (12)

வீணப்பா பெண்போகத் தாலெண் ணைந்து
விருதாவிற் போமதனல் நோயுண்டாகும்
தோணப்பா அபானனுந்திக் கீழே நின்று
சுகமாக மலஜலத்தைக் கழித்து நிற்பன்
காணப்பா வியானன்பொருத் திடங்க ளெல்லாம்
களைப்புடனே தவனமு முண்டாக்கு விப்பன்
ஊணப்பா உதானனுண்ட வசனந் தன்னை
யுறுநரம்பி லூட்டியுடல் வளர்க்குந் தானே. (13)

வளர்க்குமந்தச் சமானவாயு வதற்குத் தானே
வழிகாட்டி மிஞ்சவொட்டா திருப்பன் கூர்மன்
விளக்கிநின் றொளியாக்கி மயக்க மாக்கி
மிரட்டிவிழித் திடுநாகன் தொண் டைக்கு ணின்று
குளிக்கின்ற கபத்தோடு சேர்ந்து கூடிக்
கொட்டாவி விக்கலெனும் கொடுமை செய்வன்
பனிக்குள் வருங் கிரிகரனு முடக்கல் நீட்டல்
பாங்கான வசைவுதனில் நிற்பன் தானே. (14)

(தொடரும்)

மயில்

Dr. R. தியாகராஜன், L. I. M.

இது

"சிகியொடு ஞமலிதோகை சிகாவளஞ் சிகண்டி மஞ்ஞை
ஓகரமே மயூரமற்று முறுபிணி முகங்கலாபி
மகிழ்வுறு நவிரம் பீலி கேகய மயில்பன் முப்பேர்"

என்று நிகண்டில் கூறப்பட்ட பதின்மூன்று வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது. இதன் இறகு,

"சரணமே சிகண்டங் கூந்தல் சந்திரகங் கலாபங் கூழை
பெருகிய தோகை தொங்கல் பீலியாந் தூவியும் பேர்"

என்ற பத்து வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது.

மயில் குறிஞ்சிநிலப் பறவை. இதனை அழகிற்காகவும் பாம்பு வராதிருக்கவும், பிரார்த்தனைக்காகவும் வீடுகளில் வளர்க்கின்றனர். இதன் எல்லா உறுப்புகளும் உபயோகமாகின்றது.

இறகு:—

இதில் செம்பு சத்திருக்கின்றது. கபநாசனிச் செய்கை செம்புக்கிருத்தலின் இறகைச் சாம்பலாக்கி விக்கலுக்குச் சிறப்பாகக் கொடுக்கப்படுகின்றது. "சேத்மத்தின் கோதமலாது விக்கலடாது" என்றபடியால் விக்கலுக்குக் கபமே முதற்காரணமென்றறியலாம். மற்றும்,

"மஞ்ஞைத் தோகை பற்பங் கும்புவிக்கல் வாந்தி கெடுக்கும்" என்றபடியாலும்,

"எட்டுத்திப்பிலி * யீரைந்து சீரகம்
கட்டுத் தேனில் கலந்துண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடிற் போத்தகஞ்
சுட்டுப் போடுநான் தேரனுமல்லனே"

போத்தகம் – மயிலிறகு. போத்து – ஆண்மயில்.

என்றதினாலும் விக்கலுக்குச் சிறந்ததென்பதனை யறியலாம்.

இறகைக்கொண்டு விசிறி செய்யப்படுகின்றது. அவ்விசிறியின் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுளினால் அறியலாம்.

"மயிலிறகு விசிறி யுட்டணம் வாதகரமாம்
வாயுவறும் தோஷமறும் விடசுரமுந் தீரும்

---

* ஈரெட்டுச் சீரகம் என்ற பாடமும் உண்டு.

பயிலறிய பித்தமறும் சன்னிபாதமும் போம்
பாம்பு விஷ முதலான விஷகுணங்களறும்
அயலோடு புத்திமிகு மதிமயங்கல் தீரும்
வருமரியாக ன்மையுண்டா மாசடைந் திடாது
வெயிலருமை தெரியாது விக்கலறும் ஞானமேன்
மேலுண்டாகு மென்றனர் மெல்லியலே".

மற்றும், இறகைக் கீழ்க்கண்டவாறு சுத்தி செய்து பற்பித்து உபயோகிக்கலாம். இதனை நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கச் சுத்தியாம். கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து 9 வரட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாம். இதன் அளவு கடலையில் கால்கூறும், அனுபானம் வெண்ணெயுமாகும்.

பெருமயில் இறகு பற்பத்தை வாயில் ஈரமின்மை, விக்கல், மூச்சடைப்பு முதலிய குணங்களை உண்டாக்குகின்ற பிரமிப்பு ரோக தோடத்திற்கும்;

சிறு மயில் இறகு பற்பத்தை முதுகு வலி, பக்க இசிவு, தொப்புளில், காங்கையை உண்டுபண்ணும் வியர்வை ரோகப்பிணி தோடத்திற்கும்;

காட்டு மயில் இறகு பற்பத்தை கைநாடி நிதானப்படாமை, நடைக்கிசைவின்மை, புசித்த பதார்த்தத்தின் ருசி வேறுபடுதல் முதலிய குணங்களை யுடைய அகாதரோகப் பிணி தோடத்திற்கும்;

நாட்டு மயில் இறகு பற்பத்தை வாய்திறக்க வொட்டாமை, மேல் மூச்சுச் திணறல் முதலிய குணங்களை யுடைய அடைப்பு ரோகத்திற்கும் கடலையில் கால் கூறு வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.

நிற்க, நோயில் தோடமுண்டாம் வகையினையும் அத்தோடத்தை நீக்க மயில் இறகை உபயோகிக்கும் முறையினையும் கீழ்க்காண்க:

நோயிருக்கும் காலத்தில் குளிர்ந்த நீருண்டால் அஃது தலையில் சேர்ந்து சீதளம் உண்டாகி தோல் என்பு முதலிய சப்த தாதுக்களிலும், பின்பு மலமூத்திரத்திலும் தோடமுண்டாகி சுரமும் கண்டு கண்ணனது கொடிகட்டி யிழுப்பது போலவும் தோசை தின்றால் எப்படி தாகமும் வரட்சியும் இருக்குமோ அதைப்போல் நாவும் பல்லும் ஆம். இதற்கு மயில் தோகை, கிளியிறகு, சங்கம்பட்டை இம்

மூன்றின் சாம்பலும் வெண்தோன்றி, திரிகடுகு இந்நான்கின் தூளையும் அதனுடன் கூட்டித் தேனில் கலந்து துவரையளவு விரலில் தோய்த்து நோயாளியின் நாக்கில் தடவ நாக்கில் உண்டான சேத்துமத் தோட மறும். நாக்கில் நீர் பெருகும். வரண்ட வார்த்தை குளிர்ச்சிக்கு நிகராகும். தோள்களும் அதிராது. மூக்கிலும் நீர்வடியாது.

மயில்கறி :— ஆமாசயத்திற்கு வலிவையும் வீர்யவிர்த்தியையும் செய்யும். மற்றும் இதன் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுளா லறியலாம்.

"சூலைப் பிடிப்புகளைச் சோரிவளியைப் பித்தை
வேலைச் சிலேட்டுமத்தை வீட்டுங்காண் — நூலொத்த
வற்பவிடை மாதே யனலா மயிலிறைச்சி
நற்பசி யுண்டாக்கு நவில்.

(இ-ள்):— வெப்ப வீரியத்தையுடைய மயில்கறி கீல்வாயுவை யும், வாதசோணித நோயையும், கபபித்தத்தையும், அதிகபத்தையும் நீக்குவதன்றி நல்ல பசியையும் உண்டுபண்ணும்.

மயில் கறியுடன் சாதாப்பூத் தழை சேர்த்து சூப்பிட்டுக் குடித் துவர வயிற்றுப் பொருமல், வலி, மேகசூலை நோய் நீங்கும்.

மயிலின் கொழுப்பை உருக்கி எண்ணெயாக்கி வாதநோய்க ளுக்கும் மேகசூலைக்கும் வெளிப்பிரயோகமாக உபயோகித்தல் பழக் கம். இதன் உபயோகத்தினை Hindoosthan Meteria Medica வில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"Adeps pavonis is much prized by the native practitioners as a valuable external application in cases of rigid joints and in certain paralytic affections".

மயில் கொழுப்பை ஆண்குறியில் தடவிவர தளர்ச்சி நீங்கும்.

மயிலின் என்பைச் சுட்டுச் சாம்பலாக்கி நீரில் குழைத்து வெண் குட்டத்திற்கு வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம்.

மயில் பிச்சு சன்னிக்குக் கொடுக்கும் வயிரவங்களின் அரைப் புக்கு உபயோகமாகின்றது.

மயில் முட்டையைச் சுத்திசெய்து அதற்கு நீர்முள்ளிச் சாறு ஒரு நாள் மிதமாக விட்டரைத்து வில்லை செய்து சில்லிட்டு சீலை செய்து புடமிட்டெடுக்க பற்பமாம். இதனை கடலையில் கால்கூறு வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்க வெட்டை ரோகத்தினால் தோஷித்த தோடம் நீங்கும்.

மயில் மலம் நாகக்களங்கு செய்ய உதவு மென்பதனைக் கீழ் விற் பூட்டுப் பொருள் கோளாகக் கூறப்பட்ட வெண்பாவினு லறியலாம்.

"கங்களங் காமம் முறையாற் காணலா மெய்பொருளு
மிங்கிதமா யாருமெளிதிலே — யெங்க
ளுமைதன் னருளா லுலகி லறிய
ளுமலி மலத்தாலே நா".

மயில் மலத்தைக் கொண்டு புகையிட வீட்டில் பாம்பு வாரா தென்றும் கூறுவர்.

சித்த வைத்தியத்தின் வலிமை

Dr. N. சுப்பிரமணியம், L. I. M.
(Member, Central Board of Indian Medicine.)

"உலகி லுள்ள உயிர்களைக் காலமும்
நிலவி வாழ்ந்திட நீடுமா யுண்மறை
உலைவி லாமல் உதவிய வேதியன்
மலைவி லாததோர் மாணடி வாழ்த்துவாம்"

சித்த வைத்தியத்தின் வலிமை என்பது சித்தர்கள் வாயிலாகச் சிவபெருமானுல் அருளப்பெற்ற வைத்திய முறையின் வலிமை என விரியும். உலகில் உள்ள சகல சீவராசிகளும் எந்தப் பருவத்திலும் நிலைபெற்றுத் தன்னுடலுடன் நீண்டகாலம் வாழ்ந்து ஊக்கக் குறை வின்றி இருக்கும்படி "உடற்பிணி நீக்க முறையான" ஆயுள் மறையை முதல்வன் நந்திமூலம் உதவினன்.

சித்தர், வைத்தியம், வலிமை என்பவற்றைத் தனித்தனி விளக்கி வைத்திய சித்தர், சித்தர் வலிமை, வைத்திய வலிமை, சித்தவைத் தியம் எனப் பகுத்துக்கொண்டு சித்த வைத்தியத்தின் வலிமையைத் தொகுத்துக் கூறுவது இச் சொற்பொழிவின் நோக்கமாகும்.

சித்தர்கள் :— "பூதங்க ளைந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்க ளைந்தின் மிகுமாக மந்தன்னி
லோதுங் கலைகால மூழியுட னண்டப்
போதந்த ளைந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே".(திருமூலர்)

சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நான்கு அறிஞர் கல்லாலின் கீழிருந்து சிவபெருமானிடம் அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய தமிழ் நான்மறைகளைக் கேட்டனர். சந்தேகந்

தெளியாது மேன்மேலுங் கேள்விகள் கேட்டதால் இறைவன் சின் முத்திரை என்ற திருக் குறிப்பினால் நான்மறையின் உட்பொருளை விளங்கவைத்தார். அறிஞர் எனினும் சித்தர் எனினும் ஒன்று. திருமூலர் இவர்களை "நந்திகணத்தவர்" என்று கூறுகிறார்.

ஆயுள்மறை, சனந்தனர் என்ற நந்தி சிறப்பாகக் கற்ற, பொருள் என்ற மறையில் அடங்கும். நான்மறைகள் உலகியற்கை இன்னதெனக் குறிப்பின் விளக்கும்.

"ஆலதன் கீழிருந்து நால்வர்க்கு
அறம், பொருள், இன்பம், வீடு தெரித்தானை"— சம்பந்தர்

"சைவ வேடம் தானினைந்து ஐம்புலனு மழிந்த
சிந்தையந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம்
வீடு மொழிந்த வாயான்" — திருவாசகம்.

"அருந்தவர்க் கன்றாலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதலான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ"-திருவாசகம்

என்ற பாடல்கள் முற்கூறியதை விளக்கும்.

வேதம் அறிவு நூல்; அது இலக்கணம் போன்றது. அது பொதுவானது; போது போன்றது. அதாவது மொட்டைப் போன்றது. விரிந்த அறிவினர்க்கே விளங்குவது. திருக்குறிப்பால் விளக்கிய இறைவன் அதை ஆகமம் என்ற அன்பு நூலாக - இலக்கியமாக- சிறப்பு நூலாக- போதவிழ்ந்த மலராக மகேந்திர மலையினின்றும் அகத்தியரையும் உள்ளிட்ட ஐவருக்கு அருளினான். ஆ - உயிர் (பசு), க - கடவுள் (பதி) ; ம — மலம் (பாசம்). ஆகமம் - Scriptures believed to be revealed by God and peculiar to Saivism, Vaishnavism, Saktism or Jainism (சென்னை பல்கலைக் கழக அகராதி).

நான்மறை நான்கு, ஆகமம் ஒன்று ஆக வேதங்கள் ஐந்தும், திருவள்ளுவர் முப்பால், சனற் குமாரர் வழிவந்த மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் என்ற வீட்டினைப் பற்றிய நூல், திருமூலர் அருளிய திருமந்திரம் என்ற ஆகம நூல் ஆகியவற்றில் நமக்குக் கிடைக்கின்றன.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றுன்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த — நான்முறையை
வந்திக்கச் சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்கக், கேட்கச் செவி" உக்கிரப்பெரு வழுதியார்!

இதன் வலிமையை,

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்தபின் — போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ?

என்பதிலிருந்து அறியலாம்.

நந்தி, அகத்தியர் இவர் மாணுக்கர் மரபில் வந்தோர்; வேத ஆகமங்களைக் கற்றுக் கைவந்தோர் ஆகிய எல்லோரும் சித்தராவர்.

விவேகானந்தர் இருக்கு முதலிய ஆரிய நால் வேதங்களின் கருத்துக்களையும் அமெரிக்கா சென்று பிரசாரம் செய்து உலகம் போற்றும்படிச் செய்தார். ஆனால், தமிழ்மறையான திருக்குறள் பிரசாரம் ஒன்றுமின்றித் தானுகவே உலக முழுதும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றப்படுகிறது. சூரியனுக்குப் பிரசாரகர் வேண்டுமோ? தானுகவே பிரகாசிக்கும். தமிழ்மறையின் ஒரு பாகமான ஆயுள் மறையின் விரிவை நமது அறியாமையினுலும் அந்தகாரத்தினுலும் மூடியிருக்கிறேம். அவை நீங்க ஆயுள்மறையாகிய சூரியப் பிரகாசம் இனிது ஒளிரும்.

"வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர், வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றுரே" திருமூலர்.

அறம் முதலிய தமிழ் வேதங்களைத் தவிர வேறு அறமில்லை (பொருள் மறையில் ஆயுள்மறை அடங்கும்) ஓதுவதற்குத் தக்க எல்லா அறங்களும் அதில் உள்ளன. ஆகவே வீண் தர்க்கத்தையும் வீண்வாதத்தையும் விட்டுச் சித்தர்கள் உளத்தில் ஊறிவந்த தமிழ் நான்மறைகளை ஓதி மதிஞராகி சந்தேக விபரீதம் நீங்கிச் சமாதானம் பெறுவீராக! பல அறிஞர் அவ்விதமே வீடுற்றனர்.

வைத்தியம்:— வேதாகமங்களை உணர்ந்த அகத்தியர் பொதியையில் தங்கி ஆயுள்மறையை விரித்துரைத்தார். அது ஆயுரு மறை ஆயுள் மறை ஆயுறு மறை எனவும் அறியப்படும். ஆயுருமறை என்

பது, ஆய்–உரு–மறை என்ற முப்பதங்கள் சேர்ந்து, சோதி, துருவிப்பார் என்ற பொருளை யுடைய ஆய், உடல் என்ற பொருள்வரும் உரு என்ற பதத்துடன் சேர்ந்து உடலைச் சோதித்து நன்னிலைப் படுத்தும் நூல் என்பது பொருளாகிறது. உள்ளத்தையும், அதனுல் இயக்கப்படும் உடலையும் நன்கு ஆய்ந்து, பிணி இருப்பின் அவைகளை நீக்கி இனிது இயங்கும்படி செய்வதற்கான மறை ஆயுள் மறை. உறு—நன்மையாதல், நோய்பட்டவனை ஆராய்ச்சியின் வலிமையால் நன்மையாம்படிச் செய்தல் என்பது ஆயுறு மறைஎன்பதன் பொருள். ஆயுள் மறை பொதுவாக வைத்தியம் என எல்லாராலும் அறியப்படுகிறது.

அகத்தியர் நமது உடலை தொண்ணூற்ருறு பாகங்களாக விளக்கிஞர். அவை தொண்ணூற்ருறு கருவிகள் என்றும், தொண்ணூற்ருறு தத்துவங்கள் என்றும் கூறப்படும். அவைகளை நிலையில் வைத்தியக்கும் தொழிலே வைத்தியம் எனப்படும்.

நோய்ப்பட்ட உடலில் தக்க மருந்தை வைத்தியக்கி நோய் நீக்கப் பெற்று உடல் தன் இயலில் இயங்கும்படிச்செய்வது என்பதும் பொருந்தும்.

வலிமை :— ஆற்றலைக் குறிக்கும். பிராணிகளில் சிங்கமே வலிமை மிக்கது. வலிமையை அதை உடைய பல பொருள்களையுங் கொண்டு அளந்தறிகிருேம். நமது வைத்திய முறையில் வலிமையை நன்குணர்ந்து கொண்டபின் மற்ற வலிமைகளைக் கேட்குந் தொறும் நாம் ஒப்பிட்டு அளந்து கொள்ள இயலும்.

வைத்திய சித்தர்கள்

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர் பண்பான
அகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியார் வியாக்ரபாதர்
கோரக்கர் கமலமுனி கூனர் கண்ணர்
கார்த்திடவே இடைக்காடர் சண்டிகேசர்,
கைலாயபோகரொடு சிவாக்ய சித்தர்
போர்த்திடவே காலாங்கி புண்ணுக்கீசர்,
புகழ்மச்சர் கொங்கணரும் காப்புத்தானே

பத்தாம் நூற்ருண்டிலிருந்த கருவூரார் மேற்கூறிய பதினெண் சித்தர்களையும் வைத்தியம் வல்லவராகக் குறிக்கிருர். கடைசியாகத்

தொகுக்கப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தாரது தமிழகராதியில் 'திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டிச் சித்தர், சட்டைமுனி, சுந்தரானந்த தேவர், குதம்பைச்சித்தர், கோரக்கர்" என்ற பதினெண்மரும் வேறுபட்டவகையில் பதினெண் சித்தர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவைதவிர ப ஆ நூல்களிலும் பலவேறு வகைப்பட்ட பெயர்களையும் காணலாம். வைத்திய சித்தர்கள் எண்ணிறந்தவர்கள். வைத்யம் 18 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு அவற்றிற்குத் தக்கபடி 18 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவராக இவர்கள் இருக்கவேண்டும். காலத்திற்குத் தக்கபடி சித்தர்கள் மாறியிருக்க வேண்டும். (தொடரும்)

பெண்மலடு

மருத்துவப் பொழிலின் சென்ற மலரைக் கண்ணுற்ற எமது நண்பர் ஜி.இரங்கசாமி அய்யங்கார் கீழ்வருமாறு எழுதுகிறார்.

பிறந்தபொழுது கிரகம் நின்ற நிலையால் மலடாகுந் தன்மை:—

ஒரு பெண் பிறந்தபொழுது இராசிச் சக்கரத்தில் இலக்கினத்திற்கு ஏழில் சனி யிருப்பினும், இலக்கினத்திற்கு ஐந்தாம் அதிபதி ஒருவனைப் புதன் வீடாகிய மிதுனம், அல்லது கன்னியிலிருப்பினும் பிரகஸ்பதி நீசமாகி சனியால் பார்க்கப்பட்டாலும் அப்பெண் மலடாவாள்.

ருதுவானபொழுது கிரகம் நின்ற நிலையால் மலடாகுந் தன்மை:—

ருது இலக்கினத்திற்கு ஏழில் சனி அல்லது புதனிருந்தாலும் ருதுவான நட்சத்திரம் ஆயில்யம், கார்திகை, பூரம் பூரட்டாதி இவைகளில் ஒன்றாக இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமை அல்லது சஷ்டி திதியில் ருதுவானாலும் மலடாவாள்.

அவர் நமக்கேன்?

வருத்தும் நோய் வந்தவுடன் வாழோமென் றுணர்ந்தவுடன்
மருத்தரையும் கடவுளையும் கருத்துடனே போற்றிடுவோம்
வருத்தியநோய் தீர்ந்தவுடன் வாழ்வோமென் றறிந்தவுடன்
மருத்தரையும் கடவுளையும் மறந்திடுவோம்! அவர் நமக்கேன்.

சித்த இளம்பூரணர்.